கோயம்பேடு பேருந்து நிலைய வளாகம் தனியார் வசம் ஒப்படைக்கப்படாது

அமைச்சர் எஸ்.முத்துசாமி

சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்ற இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டாளர்கள் சங்க கூட்டமைப்பின் (கிரெடாய்) ஸ்டேட்கான்–2024 மாநாட்டின் தொடக்க விழாவில், 'கிரெடாய் தமிழ்நாடு, அறிக்கையை வெளியிட்ட அமைச்சர்கள் பி.கே.சேகர் பாபு, எஸ்.முத்துசாமி. உடன் கிரெடாய் அமைப்பின் நிர்வாகிகள்.

சென்னை, ஜன.29: கோயம்பேடு பேருந்து நிலையம் அமைந்துள்ள இடம் தனியார் வசம் ஒப்படைக்கப்படும் என பரப்பப்படும் தகவல் தவறானது என வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் எஸ். முத்துசாமி தெரிவித்தார்.

இந்திய ரியல் எஸ்டேட் மேம்பாட்டாளர்கள் சங்கக் கூட்டமைப்பின் (கிரெடாய்) தமிழ்நாடு பிரிவு சார்பில் 'ஸ்டேட்கான் 2024' என்ற இரண்டு நாள் மாநாடு சென்னை தேனாம்பேட்டையில் திங்கள்கிழமை தொடங்கியது.

இந்த மாநாட்டில் அமைச்சர்கள் எஸ்.முத்துசாமி, பி.கே.சேகர் பாபு ஆகியோர் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி மாநாட்டைத் தொடங்கி வைத்ததுடன், நைட் ஃபிராங் நிறுவனம் சார்பில் 'கிரெடாய் தமிழ்நாடு' என்ற அறிக்கையையும் வெளியிட்டனர்.

பின்னர் நிகழ்வில் அமைச்சர் முத்துசாமி பேசியதாவது:

கிரெடாய் மட்டுமல்லாமல் பல வேறு ரியல் எஸ்டேட் அமைப்புகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஏற்கெனவே நடத்தப்பட்டது. இதில் 100–க்கும் மேற்பட்ட கோரிக்கைகள் வந்தன. அதில் 42 கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, 25 கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில கோரிக்கைகளை நிறைவேற்ற சட்டத் திருத்தம் தேவைப்படுவதால் அது அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது நகர வடிவமைப்பின் எதிர்கால வளர்ச்சிக்கான மேம்பாட்டுத் திட்டங்களாக விளங்கும் மாஸ்டர் பிளான் திட்டங்கள் தமிழகத்தில் 8 இடங்களில் நடைபெற்று வருகின்றன. கோயம்பேடு பேருந்து நிலையம் தனியார் வசம் ஒப்படைக்கப்படாது. இது குறித்து தவறான தகவல் பரப்பப்படுகிறது.

தற்போது வீட்டு வசதி வாரியத்தில் 3,000 வீடுகள் விற்பனையாகாமல் உள்ளன. அதை விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விற்பனையாகாத வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார் அவர்.

அமைச்சர் பி.கே.சேகர் பாபு: ஒற்றைச் சாளர முறையைக் கொண்டு வருவது குறித்து சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆய்வு செய்து வருகிறது. மறு வகைப்பாட்டை (ரீ கிளாசிபிகேஷன்) பொருத்தவரை 2021– ஆம் ஆண்டு 47 திட்டங்களுக்கும், 2023 –ஆம் ஆண்டு 140 திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்நிகழ்வில், நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் பா.கணேசன், கிரெடாய் நேஷனல் தென் மண்டலத் துணைத் தலைவர் ஸ்ரீதரன், ஸ்டேட்கான் 2024–இன் தலைவர் ஹபீப், கிரெடாய் தமிழ்நாடு பிரிவின் தலைவர் ஆர். இளங்கோவன், செயலர் எஸ். ஆனந்த் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தீவுத்திடல் பொருள்காட்சி: 4 நாள்களில் 94,352 பேர் பார்வையிட்டனர்

சென்னை,ஜன.29: சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வரும் பொருள்காட்சியை ஜன.25 முதல் 28–ஆம் தேதி வரை 94,352 பேர் பார்வையிட்டுள்ளதாக அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் சென்னை வாலாஜா சாலையிலுள்ள சுற்றுலா வளாக கூட்டரங்கில் திங்கள்கிழமை நடைபெற்றது.

சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழக சுற்றுலாத் தலங்களில் நடைபெற்றுவரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்வில், அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசியதாவது: தமிழக அரசின் நடவடிக்கைகளால் அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத்தலமாக தமிழகம் முன்னேறியுள்ளது. தொடர்ந்து பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தீவுத்திடலில் நடைபெற்று வரும் 48–ஆவது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருள்காட்சியை ஜன.25–ஆம் தேதி முதல் ஜன.28–ஆம் தேதி வரையான 4 நாள்களில் மட்டும் 94,352 பேர் பார்வையிட்டுள்ளனர்.

சுற்றுலா வளர்ச்சித்திட்டப்பணிகளை குறித்த காலத்துக்குள் முடித்து மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என்றார் அவர்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் க.மணிவாசன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் காகர்லா உஷா, சுற்றுலாத் துறை துணைச் செயலர் அ.மணிகண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வருமானவரிப் பிடித்தம் விழிப்புணர்வு கருத்தரங்கம்

சென்னை,ஜன.29: சென்னை வருமானவரித்துறை கூடுதல் ஆணையரகம், வரிப்பிடித்தம் சரகம்–3, சார்பில் சென்னை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலக வளாகத்தில் அந்த துறை ஊழியர்களுக்கு வரிப்பிடித்தம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில் வருமானவரி துணை ஆணையர் ராஜாமனோகர், வருமானவரி அலுவலர்கள் க.ராஜாராமன், ஓ.செந்தில் குமார் ஆகியோர் வருமானவரி சட்டத்தில் இடம்பெற்றுள்ள வரிப்பிடித்தம் செய்யவேண்டிய பிரிவுகளின் சாராம்சத்தை விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் இணை இயக்குநர் விஜய கார்த்திகேயன், நிதி ஆலோசகர் இ. பாஸ்கர், வருமான வரித் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கோயம்பேட்டில் 14 கடைகளுக்கு 'சீல்'

சென்னை கோயம்பேடு காய்கறி மற்றும் மலர் அங்காடியில் உரிமம் புதுப்பிக்காத கடைகளுக்கு 'சீல்' வைத்த அதிகாரிகள்.

சென்னை, ஜன.29: கோயம்பேட்டில் உரிமம் (லைசன்ஸ்) புதுப்பிக்காத 14 கடைகளுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அதிகாரிகள் திங்கள்கிழமை 'சீல்' வைத்தனர்.

சென்னை கோயம்பேடு காய்கறி மற்றும் மலர் அங்காடியில் உள்ள 14 கடை உரிமையாளர்கள் தங்கள் கடைகளுக்கான லைசன்ஸை கடந்த 2021 –ஆம் ஆண்டு முதல் 2023 –ஆம் ஆண்டு வரை புதுப்பிக்கவில்லை.

இது தொடர்பாக பல முறை நோட்டீஸ் அனுப்பியும் அவர்கள் புதுப்பிக்கவில்லை. இதைத் தொடர்ந்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ராவின் உத்தரவின் பேரில், கோயம்பேடு தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் மு. இந்துமதி முன்னிலையில் உரிமம் புதுப்பிக்காத 14 கடைகளுக்கும் திங்கள்கிழமை 'சீல்' வைக்கப்பட்டது.

'ஸ்கைவாக்' மேம்பாலச் சுவரில் மோதிய டேங்கர் லாரியால் பரபரப்பு

சென்னை, ஜன.29: சென்னை ஸ்கைவாக் மேம்பாலச் சுவரில் 'பெட்ரோலியம்' என எழுதப்பட்டிருந்த டேங்கர் லாரி மோதி விபத்து ஏற்பட்டது.

சென்னை 'ஸ்கை வாக்' மேம்பாலம் அருகே திங்கள்கிழமை இரவு வழக்கம்போல போலீஸார் வாகனச் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது அந்த மேம்பாலம் வழியாக பேட்ரோலியம் என எழுதப்பட்டிருந்த டேங்கரில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு லாரி ஒன்று வந்தது. அந்த லாரி திடீரென ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து மேம்பாலத்தின் சுற்றுச்சுவர் மீது மோதி கவிழ்ந்தது. இதில் டேங்கரில் இருந்த தண்ணீர் பீறிட்டு வெளியில் பாய்ந்தது.

பெட்ரோலியம் என எழுதப்பட்டிருந்த டேங்கர் லாரியிலிருந்து தண்ணீர் வெளியேறுவதைக் கண்டு, வாகன சோதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்து போலீஸாரும், சாலையில் சென்று கொண்டிருந்து வாகன ஓட்டிகளும், அதை பெட்ரோல் என கருதி அலறியடித்து ஓட்டம் பிடித்தனர். ஆனால், லாரியிலிருந்து வெளியேறுவது பெட்ரோல் இல்லை, அந்தப் பகுதியிலுள்ள தனியார் ஹோட்டலுக்கு எடுத்து செல்லும் தண்ணீர் என தெரியவந்த பின்னர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். இதனால், அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

விருது...

சென்னை மயிலாப்பூரில் திங்கள்கிழமை நடைபெற்ற 'பதிப்புலகின் போராளிகள்' நிகழ்ச்சியில் தமிழ்நாட்டு பாடநூல் கழகத்தின் உதவி இயக்குநர் ப.சரவணனுக்கு 'அன்னம்' விருதை வழங்கிய ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனர் ம. முரளி, பாரதிய வித்யா பவனின் நிர்வாக இயக்குநர் கே.என்.ராமசாமி. உடன், 'இலக்கியவீதி' செயலர் மலர்மகன், பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி உள்ளிட்டோர்.

மகாலிங்கபுரம் ஸ்ரீ ஐயப்பன் கோயிலில் பிப்.23–இல் நூறும் பாலும், சர்ப்ப பலி பூஜை

சென்னை, ஜன.29: மகாலிங்கபுரம் ஸ்ரீ ஐயப்பன் – குருவாயூரப்பன் கோயிலில் பிப்.23 ஆம் தேதி நூறும் பாலும் மற்றும் சர்ப்ப பலி பூஜைகள் நடைபெற உள்ளன.

இது குறித்து கோயில் நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்தி:

பிப்.23 ஆம் தேதி காலை 7–11மணி வரை நூறும் பாலும் பூஜையும், சர்ப்ப பலி பூஜை மாலை 5.30 –8 மணி வரையும் நடைபெறவுள்ளன.

கேரளத்தில் உள்ள பிரசித்தி பெற்ற நாக கோயிலான பாம்புமேக்காடு மனையைச் சேர்ந்த ஆச்சாரியர் பிரம்ம ஸ்ரீ சங்கரன் நாராயணன் நம்பூதிரி தலைமையில் இப்பூஜைகள் நடைபெறும்.

கேரளத்தில் உள்ள நாகங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட கோயில்களிலும், பிரத்யேக நாகங்களின் கோயிலான சர்ப்பகாவிலும் ராகு–கேது சர்ப்ப தோஷம் நீங்க, திருமணத்தடை, குழந்தை பாக்கியம் வேண்டி, குடும்ப ஐஸ்வர்ய விருத்தி, தோல் வியாதிகள் நீங்க இப்பூஜைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

பக்தர்கள் இப்பூஜையில் பங்கேற்க www.ayyappantemplesabs.org என்ற இணையதள முகவரி வாயிலாகவும்,

Mahalingapuram Ayyappan Temple என்ற கைப்பேசி செயலி மூலம் அல்லது நேரடியாகவும் முன்பதிவு செய்துகொள்ளலாம். மேலும் தகவல்களுக்கு 8807918811 என்ற கைப்பேசி எண்ணில் தொடர்புகொள்ளலாம் என கோயில் நிர்வாக அதிகாரி அனிஷ்குமார் தெரிவித்தார்.

மாடு முட்டியதில் முதியவர் பலத்த காயம்

சென்னை, ஜன.29: திருவல்லிக்கேணியில் மாடு முட்டியதில் முதியவர் பலத்த காயமடைந்தார்.

திருவல்லிக்கேணி பந்தல வேணுகோபால் தெருவைச் சேர்ந்தவர் கன்னியப்பன் (71). இவர், திங்கள்கிழமை காலை தேரடித் தெருவில் உள்ள ஆவின் நிலையத்தில் பால் பாக்கெட் வாங்கிவிட்டு, வீட்டை நோக்கி நடந்து வந்தார். அப்போது சாலையோரம் நின்று கொண்டிருந்த ஒரு மாடு, கன்னியப்பனை முட்டித் தள்ளியது. இதில் அவர் பலத்த காயமடைந்தார்.

அவரை பொதுமக்கள் மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.

இது தொடர்பாக ஐஸ்ஹவுஸ் போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். ஏற்கெனவே திருவல்லிக்கேணியில், கடந்த அக்டோபர் மாதம் மாடு முட்டியதில் 80 வயதான சுந்தரம் என்ற முதியவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

IDBI BANK ஐடிபிஐ வங்கி லிமிடெட், சோழிங்கநல்லூர் கிளை
விஷ்ணு இல்லம், எண்: 1/12, ராஜீவ் காந்தி சாலை, பழைய மகாபலிபுரம் சாலை, செம்மஞ்சேரி, சென்னை 600 119.

ஐடிபிஐ வங்கி லிமிடெட் - தங்க நகைகள் ஏல அறிவிப்பு

கீழ்கண்ட விவரங்களின்படி தங்க நகைகளின் ஈட்டின் பேரில் கடன் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற கடன் தொகைகளை திருப்பி செலுத்தாத காரணத்தினால், கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட நகைகளை பொது ஏலத்தில் விட முடிவெடுக்கப்பட்டுள்ளது. பொது ஏலம் 03-02-2024 அன்று மாலை 4.30 மணிக்கு, ஐடிபிஐ வங்கி, விஷ்ணு இல்லம், எண்:1/12, ராஜீவ் காந்தி சாலை,பழைய மகாபலிபுரம் சாலை, செம்மஞ்சேரி, சென்னை 600 119 கிளையில் நடைபெறும். ஏலம் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

வ எண்	கடன்தாரர் பெயர், கணக்கு எண்	28.01.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகை	மொத்த எடை கிராமில்	ரிசர்வ் தொகை
1	U. இந்து 0887671100074731	₹ 3,75,318/-	104.6 கிராம்	₹ 4,59,000/-

ஏலகேட்பு தொகை சமர்பிக்க கடைசி தேதி 03-02-2024, மாலை 4.00 வரை ஏலதாரர் KYC சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தேதி : 29.01.2024., இடம் : சென்னை அதிகாரப்பூர்வ அதிகாரி, ஐடிபிஐ வங்கி லிட்.

தமிழ்நாடு அரசு - **இந்து சமய அறநிலையத்துறை**
திருக்கோயில் திருப்பணி
ஒப்பந்த வகை: ஒட்டு மொத்தம் /இனவிலைமுறை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 1/2024/ நாள் : 26.01.2024

தக்கார்/செயல் அலுவலர், அருள்மிகு சௌரிராஜபெருமாள் திருக்கோயில், திருக்கண்ணபுரம், நாகப்பட்டினம் வட்டம், மற்றும் மாவட்டம் - அவர்களால் இந்துசமய அறநிலையத்துறையில் பதிவுபெற்ற நடப்பில் உள்ள திருக்கோயில் திருப்பணிகளில் அனுபவம் வாய்ந்த ஸ்தபதி/சிற்பி அல்லது தமிழ்நாடு அரசு துறை/ அரசு நிறுவனங்களில் வகுப்பு IV (ரூ. 200 கோடி வரை) மற்றும் அதற்கு மேல் பதிவு பெற்ற நடப்பிலுள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்கண்ட பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

வ. எண்	பணியின் பெயர்	ஒப்பந்த தொகை (ரூ. இலட்சத்தில்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட)	முன் வைப்பு தொகை (மின்னணு மூலம்)	பணிக் காலம்	ஒப்பந்ததாரர்கள் தகுதி	முன்வைப்புத் தொகை வரவு வைத்து கட்ட வேண்டிய அலுவலகம்
1.	புதுதுபார்த்து புதுபித்தல் மூன்று நிலை இராஜகோபுரம், அருவைகம், பக்தி உலா மண்டபம், பெருமாள் சன்னதி மண்டபம், மதில்கள், தரை தளம்	ரூ.86.52	ரூ.53,300/-	18 மாதம்	இந்துசமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற நடப்பில் உள்ள ஸ்தபதி/சிற்பி அல்லது தமிழ்நாடு அரசுதுறை/ அரசு நிறுவனங்களில் வகுப்பு IV (ரூ. 200 கோடி வரை) மற்றும் அதற்கு மேல் பதிவு பெற்ற நடப்பிலுள்ள தகுதியுள்ள ஒப்பந்ததாரர்கள்	அருள்மிகு சௌரிராஜ பெருமாள் திருக்கோயில், திருக்கண்ணபுரம் (மின்னணு மூலம்)

1. நாகப்பட்டினம் மாவட்டத்தில் மேற்கண்ட பணிக்கான விபரம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இதர விபரங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும். 2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் 30.01.2024 முதல் 13.02.2024 மாலை 5.00 மணி வரை 3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் நேரம் 13.02.2024 மாலை 5.00 மணி வரை 4. ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 14.02.2024 முற்பகல் 11.00 மணி முதல்.

செயல் அலுவலர்,
அருள்மிகு சௌரிராஜபெருமாள் திருக்கோயில்,
திருக்கண்ணபுரம் நாகப்பட்டினம் வட்டம் மற்றும் மாவட்டம்.

செ.ம.தொ.இ./ 460 /ஒப்பந்தப்புள்ளி/2024

Govt of India
Ministry of Micro, Small & Medium Enterprises
MSME Development & Facilitation Office,
65/1, GST Road, Guindy, Chennai - 32
in association with
DIRECTORATE GENERAL OF FOREIGN TRADE, CHENNAI

Organizes
One day National Workshop on
"Adoption of E-commerce for exports by MSME's"

Date: 7th February 2024, Time: 9.30am to 5.00pm
Venue: Hotel Hablis, No: 19 GST Road, Guindy, Chennai – 600 032,

Objective : The main objective of the programme is to encourage and to bring the awareness for the existing Micro and Small Entrepreneurs to start exporting of their products through E-commerce mode with the help of the organizations like Amazon, Flipkart, Walmart, and also with Dak Niryat Kendra"s etc

Who should attend : MSME Units having valid Udyam Registration interested in export business through E-commerce mode.

Programme Coverage : Export Policy and Procedures for E-commerce, Procedures and criteria for Export through Amazon, Flipkart, walmart, Dak Niryat Kendra's and how Amazon, Walmart will help MSME's for exports in E-commerce mode.

Registration : The details of the participants may be submitted through google link :
https://forms.gle/qVQXPFwsuE1Pr2kT7
(Participation is Limited to 100 Persons only on first cum first serve basis strictly by prior registration)

Registration Fee : Free

For further details contact:
Shri C P REDDY, Assistant Director
MSME-Development & Facilitation Office
MSME-Bhavan, 65/1 GST Road, Guindy, Chennai – 600 032
Mob: 9438175051, www.msmedi-chennai.gov.in Email: dcdi-chennai@dcmsme.gov.in

கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தைப் புனரமைக்கும் பொருட்டு, கலைப்பு நிலையில் உள்ள தி ஜெய்ப்பூர் சுகர் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் (கூட்டுரிமைக் கடன் நிறுவனம்) பங்குதாரர்களுடன் இணக்கம் அல்லது உடன்பாடு மேற்கொள்ளும் திட்டத்தைத் தாக்கல் செய்வதற்கான விருப்ப வெளியீட்டு [EOI] அழைப்பு

(இந்திய இன்சால்வன்சி மற்றும் பாங்கரப்சி ஆணைய (கலைப்பு நடவடிக்கை) ஒழுங்குமுறைகள் 2016, ஒழுங்குமுறை 2B மற்றும் அதனுடன் நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 230 ஆகியவற்றின் கீழும் அத்துடன் மாண்பமை தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தின் சென்னைக் கோட்ட அமர்வு-II வழங்கிய CP/1307/IB/2018 கீழான 17.11.2021 நாளிட்ட IA/255(CHE)/2021 எண் கொண்ட உத்தரவு அதனுடன் நிறுவன மேல்முறையீட்டின் மீது மாண்பமை தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் சென்னை அமர்வு வழங்கிய 16.01.2024 நாளிட்ட (AT)(CH)(Ins) எண்: 302/2021 எண் கொண்ட உத்தரவு ஆகியவற்றின்படியும்)

வ.எண்	தொடர்புடைய விவரங்கள்	
1.	கூட்டுரிமைக் கடன் நிறுவனத்தின் பெயர் மற்றும் கூட்டுரிமை நிறுவன அடையாள எண் (CIN) & நிரந்தரக் கணக்கு எண் (PAN)	தி ஜெய்ப்பூர் சுகர் கம்பெனி லிமிடெட் CIN: U15421TN1936PLC011632 PAN: AAACT9942R
2.	பெரும்பாலான அசையாச் சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	a. சாகள்ளு, ஜங்காரெட்டிகுடம் மற்றும் போத்தவரம் - ஆந்திர மாநிலம். b. ராயகடா - ஒரிசா மாநிலம்.
3.	பங்குதாரர்கள் / கேட்புரிமையாளர்கள் பட்டியல்	விவரங்களுக்கு மின்னஞ்சல் எழுத வேண்டிய முகவரி: liquidator. jeyporesugar@gmail.com
4.	விருப்ப வெளியீட்டை [EOI] முன்மொழிவதற்கான தகுதி வரையறை	விவரங்களுக்கு மின்னஞ்சல் எழுத வேண்டிய முகவரி: liquidator. jeyporesugar@gmail.com
5.	விருப்ப வெளியீடுகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்	16.02.2024
6.	விருப்ப வெளியீட்டை முன்மொழிந்தவர்களின் தற்காலிகப் பட்டியல் வெளியிடப்படும் நாள்	18.02.2024
7.	தற்காலிகப் பட்டியலுக்கான மறுப்புகள் தாக்கல் செய்யக் கடைசி நாள்	21.02.2024
8.	முன்மொழிந்தவர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் நாள்	23.02.2024
9.	முன்மொழிந்தவர்களுக்கு நடவடிக்கை ஆவணம் வழங்கப்படும் நாள்	24.02.2024
10.	இணக்கம் அல்லது உடன்பாட்டுத் திட்டத்தைத் தாக்கல் செய்யக் கடைசி நாள்	16.03.2024
11.	விருப்ப வெளியீட்டைத் தாக்கல் செய்வதற்கான மின்னஞ்சல் முகவரி	liquidator.jeyporesugar@gmail.com

குறிப்பு: விருப்ப வெளியீடு தாக்கல் செய்ய விரும்பும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் வட்டியில்லா டேவணித்தொகையாக ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) செலுத்த வேண்டும்.

வரப்பெற்ற விருப்ப வெளியீடுகள் அனைத்தும் கலைப்பு அலுவலரால் / பங்குதாரர் ஆலோசனைக் குழுவால் (SCC) / ஈடு பெற்று நிதியளித்த கடனாளர்களால் (SFCs) மதிப்பீடு செய்யப்படும். அதன் பின்னர் மேல்நடவடிக்கை தொடர்பான தகவல் அல்லது ஆவணங்கள் இறுதி செய்யப்பட்ட பட்டியலில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு அளிக்கப்படும். எந்தக் காரணமும் முன்வைக்காமல் இந்த நடவடிக்கையை / விண்ணப்பத்தை / காலக்கோட்டை ரத்துச் செய்ய அல்லது மாற்றம் செய்யக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமை உண்டு என்பதோடு அவர் எந்த விதத்திலும் பொறுப்புக்கூறலுக்கு உரியவர் இல்லை.

ஒம்/-
S. ஹரி கார்த்திக் நாள்: 29.01.2024
கலைப்பு அலுவலர், தி ஜெய்ப்பூர் சுகர் கம்பெனி லிமிடெட் இடம்: சென்னை
பதிவு எண்: IBBI/IPA-002/IP-N01201/2021-2022/14009
தொடர்பு முகவரி:
31, புதிய எண் 2, பழைய எண் 29, 2ஆவது தளம், நாகேசுவரா சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600034
பதிவு முகவரி: எண் 3, A-பிளாக், தமிழ்நாடு காவலர் குடியிருப்பு, பாரதி அவென்யூ 2ஆவது தெரு, கோட்டூர், சென்னை, தமிழ்நாடு-600085, இந்தியா. கைப்பேசி: +91-9176488194.
மின்னஞ்சல்: liquidator.jeyporesugar@gmail.com & harikarthikcscma@gmail.com

கடன் மீட்பு தீர்ப்பாயம் - III
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை-600006.

TRC எண்.414/2023 **மின்னணு ஏல விற்பனை** தேதி:24.01.2024

யூகோ வங்கிக்கு OA எண்.451/2015-ன் படி R.தனசிங் மற்றும் ஒருவரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய 07.05.2018-அன்றுள்ளபடி பாக்கித் தொகையான ரூ.34,37,259/- (ரூபாய் முப்பத்தி நான்கு இலட்சத்து முப்பத்தி ஏழாயிரத்து இருநூற்று ஐம்பத்தி ஒன்பது மட்டும்) வசூலிக்கப்படும் பொருட்டு கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது கீழே கையொப்பமிட்டுள்ளவரால் https://www.bankeauctions.com-என்ற வலைத்தளத்தில் மின்னணு ஏல முறையில் விற்பனை செய்யப்பட இருக்கிறது.

சொத்து விபரம்

தென்சென்னை பதிவு மாவட்டம், பம்மல் சார்பதிவு மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, கெருகம்பாக்கம் கிராமம், "பட்டம்மாள் கார்டன்" (லேஅவுட் அப்ருவ்டு PPD/LO எண்.31/2012), மனை எண்.23, பழைய சர்வே எண்.322/1, புதிய சர்வே எண்.322/1A, பட்டா எண்.3268-ன் படியான புதிய சர்வே எண்.322/1A1B-ல் மொத்தமுள்ள 1728 சதுர அடி அளவிலான நிலத்தில் 415 சதுர அடி பாகம் பிரிக்கப்படாத பங்கு நிலம் மற்றும் 878 சதுர அடி பில்டப் ஏரியாவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்பு ஃபிளாட் எண்.A. எல்லைகள்: வடக்கில்: மனை எண்.24, தெற்கில்: மனை எண்.22, கிழக்கில்: ரோடு, மேற்கில்: சிராந்த் அவென்யூ லேஅவுட்.

குறைந்த பட்ச விலை:ரூ.30,00,000/- (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்)

ஆன் - லைன் ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம்	: 04.03.2024 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை ஏலம் முடிவடையும் வரை தலா 3 நிமிடங்கள் கால அவகாசம் தொடர்ந்து நடைபெறும்
டேவணித் தொகை	: குறைந்தபட்ச விலையில் 10%
டேவணித்தொகையுடன் கூடிய விலைக்குறிப்பீட்டு படிவத்தினை சமர்ப்பிக்க கடைசி தேதி	: "மீட்பு அதிகாரி, DRT-3, சென்னை", கணக்கு எண்.163302000000250-ல் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கதீட்ரல் கிளை, சென்னை-2. IFSC குறியீடு:IOBA0000109- என்ற கணக்கில் 02.03.2024-க்குள் செலுத்த வேண்டும்.
விலைக் குறிப்பீட்டுத் தொகையை உயர்த்திக் கோரும் அளவு	: குறைந்தபட்சம் ரூ.50,000/- அல்லது ரூ.50,000/-ன் மடங்கில்
சொத்தினை பார்வையிட	: 21.02.2024-காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை.

தீர்ப்பாயத்தினால், எந்தவொரு சூழ்நிலையிலும் விலைப்புள்ளிகள் படிவங்களாக ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது மற்றும் விசாரணைகள் எதுவும் ஊக்குவிக்கப் படமாட்டாது.

மேற்குறிப்பிட்டுள்ள ஏலம் இ-ஏலம் பற்றிய இதர விபரம் மற்றும் விண்ணப்ப படிவம் விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகளை பின்வரும் இணையதளத்தில் காணலாம்.
https:// www.bankeauctions.com

ஏதேனும் விபரங்கள், தேவைப்படின் யூகோ வங்கி, சாஸ்திரி நகர் கிளை, எண்.107, LB ரோடு, அடையார், சென்னை-600 020. (தொடர்பு கொள்ள வேண்டிய நபர்:திரு.ராஜரத்தினம்-முதன்மை மேலாளர்-9488084276); மின்னஞ்சல்: shastr@ucobank.co.in மற்றும் சேவை வழங்குபவரான திரு.M.பிரபாகரன் - 74182 81709, ஆகியோர்களை தொடர்பு கொள்ளலாம்.

(ரமேஷ் மன்னார்)
மீட்பு அதிகாரி

தமிழ்நாடு அரசு
நகராட்சி அலுவலகம் / அருப்புக்கோட்டை நகராட்சி
2024-2027 ஆம் ஆண்டுக்கான குத்தகை குறுகிய கால பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண்.5996 / 2023 /அ1 / நாள்: 29.01.2024

2024-2027ம் ஆண்டுக்கான அருப்புக்கோட்டை நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படியும் 09.02.2024, வெள்ளிக்கிழமை அன்று முற்பகல் 11.30 மணியளவில் இந்நகராட்சி அலுவலகத்தில் வைத்து பகிரங்க பொது ஏலம் விடப்படும்.

[illegible]

அருப்புக்கோட்டை நகராட்சி குத்தகை இனத்திற்கான உரிமப்பட்டியல்

வ.எண்	ஏலமிடப்படும் / ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் குத்தகை இனம்	வைப்பு தொகை	[illegible]	[illegible]	குத்தகை உரிமகாலம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	[illegible]	3,00,000.00	5,00,000.00	1,00,000.00	01.04.2024 முதல் 31.03.2027 முடிய
2	[illegible]	75,000.00	2,00,000.00	50,000.00	01.04.2024 முதல் 31.03.2027 முடிய
3	[illegible]	50,000.00	2,00,000.00	50,000.00	01.04.2024 முதல் 31.03.2027 முடிய
4	[illegible]	1000.00	--	--	01.07.2024 முதல் 30.06.2027 முடிய
5	[illegible]	1000.00	--	--	01.07.2024 முதல் 30.06.2027 முடிய
6	[illegible]	75,000.00	2,00,000.00	50,000.00	01.07.2024 முதல் 30.06.2027 முடிய

செ.ம.தொ.இ / 469 / ஒப்பந்தப்புள்ளி /2024 ஆணையாளர், அருப்புக்கோட்டை நகராட்சி

बैंक ऑफ़ इंडिया **பேங்க் ஆஃப் இந்தியா**
Relationships beyond banking

மவுண்ட்ரோடு கிளை
'Dhun Building', எண்.827, அண்ணாசாலை, சென்னை-600002
Ph: 044- 2852 0664, 2852 1389
Email: mountroad.chennai@bankofindia.co.in

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்கானது) [விதி 8(1)]

கீழே கையொப்பமிட்டுள்ள **பேங்க் ஆஃப் இந்தியா**, அதிகாரபூர்வ அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை சட்டம் பிரிவு 13(12) அதன் விதி 3ன்படியும் அதனுடன் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதியின் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி **15-09-2023** தேதியிட்ட மூன்று கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) வழங்கப்பட்டுள்ள

1) திரு. மூர்த்தி (கடன்தாரர்), முகவரி: 23, அண்ணா தெரு, ராம் நகர், அம்பத்தூர், திருவள்ளூர், சென்னை, தமிழ்நாடு-600053 மற்றும் **திருமதி.நித்தியகல்யாணி (ஜாமீன்தாரர்),** முகவரி: (a) 23, அண்ணா தெரு, இராம் நகர், அம்பத்தூர், திருவள்ளூர், சென்னை, தமிழ்நாடு -600053. மற்றும் (b) ஃப்ளாட் எண்: G2, தரை தளம், வெங்கட் ஹோம்ஸ், புதிய கதவு எண்:6, பழைய கதவு எண்:12, VOC தெரு, இராம் நகர், அம்பத்தூர், சென்னை-600 053 ஆகியோர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி கோரிக்கை கடன் கணக்கின் நிலுவைத் தொகையான **ரூ.3,58,514.96 (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து ஐநூற்று பதினான்கு மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு) மற்றும்**

2) திருமதி சரண்யா D (கடன்தாரர்), முகவரி: (a) எண் 2, பள்ளிக்கோடா தெரு, நேட்ராம்பாக்கம், காட்டுதேவத்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு. & (b) F1, மனை எண்:62, புதிய எண்:21, பழனியப்பா நகர் 3வது அவென்யூ, அம்பத்தூர், சென்னை-600053. மற்றும் **திருமதி.நித்தியகல்யாணி (ஜாமீன்தாரர்),** முகவரி: (a) 23, அண்ணா தெரு, இராம் நகர், அம்பத்தூர், சென்னை , தமிழ்நாடு -600053. & (b) ஃப்ளாட் எண்: G2, தரை தளம், வெங்கட் ஹோம்ஸ், புதிய கதவு எண்:6, பழைய கதவு எண்:12, VOC தெரு, இராம் நகர், அம்பத்தூர், சென்னை-600 053 ஆகியோர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி கோரிக்கை கடன் கணக்கின் நிலுவைத் தொகையான **ரூ.3,85,687.96 (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்து ஐந்தாயிரத்து அறுநூற்று எண்பத்து ஏழு மற்றும் பைசா தொண்ணூற்று ஆறு) மற்றும்**

3) திரு. கார்த்திகேயன் சோமசுந்தரம் (கடன்தாரர்), முகவரி: 8/11, நைனார் தெரு, எருக்கஞ்சேரி, கொடுங்கையூர், சென்னை-600118. மற்றும் **2) திருமதி.நித்தியகல்யாணி (ஜாமீன்தாரர்),** முகவரி: (a) 23, அண்ணா தெரு, இராம் நகர், அம்பத்தூர், சென்னை , தமிழ்நாடு -600053. முகவரி: (b) ஃப்ளாட் எண்: G2, தரை தளம், வெங்கட் ஹோம்ஸ், புதிய கதவு எண்:6, பழைய கதவு எண்:12, VOC தெரு, இராம் நகர், அம்பத்தூர், சென்னை-600 053. ஆகியோர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி கோரிக்கை கடன் கணக்கின் நிலுவைத் தொகையான **ரூ.3,75,345.09 (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து முன்னூற்று நாற்பத்து ஐந்து மற்றும் பைசா ஒன்பது) மற்றும்** மேலும் வங்கியால் ஏற்படும் அனைத்து செலவினங்கள் மற்றும் கட்டணங்கள் சேர்த்து மூன்று கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர்களுக்கு இந்த அறிவிப்பு கிடைத்த **60 நாட்களுக்குள்** திரும்ப செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர் கடன் நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதாவது, மேற்படி 2002 ஆம் ஆண்டு சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை **24.01.2024** அன்று சுவாதீனம் செய்துள்ளார்.

பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்)களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமான சொத்து விஷயத்தில் எந்தவொரு பேரமோ, நடவடிக்கைகளோ வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது **பேங்க் ஆஃப் இந்தியா -க்கு** திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையான **ரூ.11,19,548.01 (ரூபாய் பதினோரு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐநூற்று நாற்பத்து எட்டு மற்றும் பைசா ஒன்று)** (மேற்குறிப்பிட்டுள்ள மூன்று கடன்தாரர்கள் கடன் நிலுவைத் தொகை ஒன்றாக நிலுவையில் உள்ளது) **மேலும் 16.09.2023** அன்று முதல் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டியுடன் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும் (கேட்பு அறிவிப்பு தேதிக்கு பிறகு உடனடியாக).

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13 (8) நிபந்தனைகளின்படி கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்(கள்)களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையாச் சொத்தின் விவரங்கள்

சென்னை - 600 053, அம்பத்தூர், இராம் நகர், V.O.C தெரு, முன்னர் எண்.13, பழைய எண்.12, புதிய எண்.6 இன் மொத்தம் 3,153ச.அடியில் பிரிக்கப்படாத 13.38% பங்கு (அதாவது 422ச.அடி) அதனுடன் தரை தளத்தில் உள்ள (சேவைப் பரப்பு மற்றும் பொதுப் பரப்பு உட்பட) 927ச.அடி கொண்ட ஃப்ளாட் எண்.G2, (387ச.அடி நிலத்தில் 35 ச.அடி, மூடிய கார் நிறுத்தும் பரப்பு), மற்றும் பின்வரும் இரண்டு வகையின் சொத்துக்களின் அனைத்து பொது உரிமைகள் மற்றும் விகிதாச்சரப்படி பிரிக்கப்படாத பங்கு அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி: **வகை எண். 1:** திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பழைய எண்.59, புதிய எண்.21, ஒரகடம் கிராமம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, மண்டலம் 7, வார்டு எண்.79, பைமாஸ் எண்கள்.1365 மற்றும் 1366, பழைய டவுன் சர்வே எண்.36/2E, சர்வே எண். 36/2, பிரிக்கப்பட்ட நிலப் பதிவேடு, வார்டு "A", பிளாக் 33, நகர சர்வே எண்.38, RPT எண். 8257/2011 இல் அடங்கிய சென்னை - 600 053, அம்பத்தூர், "இராம் நகர் - V.O.C தெரு", முன்னர் எண்.13, பழைய எண்.12, புதிய எண்.6, இல் அமைந்துள்ள மனை எண்.B இன் பாகம் 2,670ச.அடி சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: குறிக்கப்பட்ட வகை எண்.2 மற்றும் இங்கு குறிப்பிட்டபடி; தெற்கில்: திரு.S. இராஜகோபால் த/பெ. திரு.சீனிவாசன் அவர்களுக்குச் சொந்தமான மனை எண்.1; கிழக்கில்: முன்னர் திரு. துரைசாமி பிள்ளை அவர்களின் சொத்து, தற்போது பாரதி ஹோம்ஸ், ஃப்ளாட்ஸ் மற்றும் திரு. M. இராதாகிருஷ்ணன் அவர்களின் வீடு; மேற்கில்: V.O.C தெரு. **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வட புறம்: 47 ½ அடி; கிழக்கு மேற்காக தென் புறம்: 50 ½ அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் : 54 ½ அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம் : 54 ½ அடி. ஆக மொத்தம் 2,670ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம்.

வகை எண்.2: திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பழைய எண்.59, புதிய எண்.21, ஒரகடம் கிராமம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, மண்டலம் 7, வார்டு எண்.79, பைமாஸ் எண்கள்.1365 மற்றும் 1366, பழைய டவுன் சர்வே எண்.36/2E, சர்வே எண். 36/2, பிரிக்கப்பட்ட நிலப் பதிவேடு, வார்டு "A", பிளாக் 33, நகர சர்வே எண்.38, RPT எண். 8257/2011 இல் அடங்கிய சென்னை - 600 053, அம்பத்தூர், "இராம் நகர் - V.O.C தெரு", முன்னர் எண்.13, பழைய எண்.12, புதிய எண்.6, இல் அமைந்துள்ள மனை எண்.B இன் பாகம் அசலில் பரப்பளவு 483ச.அடி சொத்து அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. **எல்லைகள்:** வடக்கில்: 2வது விற்பனையாளர் திரு.K.K.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வீடு; தெற்கில்: குறிக்கப்பட்ட வகை எண்.1 மற்றும் இங்கு குறிப்பிட்டபடி; கிழக்கில்: முன்னர் திரு. துரைசாமி பிள்ளை அவர்களின் சொத்து, தற்போது பாரதி ஹோம்ஸ், ஃப்ளாட்ஸ் மற்றும் திரு. M. இராதாகிருஷ்ணன் அவர்களின் வீடு; மேற்கில்: V.O.C தெரு. **நாற்பரப்புகள்:** கிழக்கு மேற்காக வட புறம்: 46 அடி; கிழக்கு மேற்காக தென் புறம்: 46 அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் : 10 ½ அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம் : 10 ½ அடி. ஆக மொத்தம் 483ச.அடி விஸ்தீரணமுள்ள நிலம். வகை எண்கள்.1 மற்றும் 2 மொத்தமாக 3,153ச.அடி விஸ்தீரணம். வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட **திருமதி. M.நித்தியகல்யாணி க/பெ. திரு. K. மூர்த்தி அவர்களின் பெயரில் உள்ள சொத்து.**

தேதி : 24.01.2024; அதிகாரபூர்வ அதிகாரி,
இடம் : சென்னை பேங்க் ஆஃப் இந்தியா